மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : டிராக்டர்கள் இப்போது கூட இங்கு நூற்றுக்கு நூறு உற்பத்தி செய்யப்படவில்லே. முதலில் வெளிநாட்டுப் பகுதியாக நூற்றுக்கு நூறு என்று ஆரம்பித்து பிறகு 90, 80 என்று படிப்படியாகக் குறைந்து, பிறகு நூற்றுக்கு நூறு இந்தியா அல்லது தமிழ்நாடு என்ற முறையில் உற்பத்தி செய்கிரேம். அந்த முறையில் தான், இதிலே கூட, 49 பகுதி தமிழ்நாடு 51 பகுதி ஹங்கேரி என்று ஆரம்பித்து பிறகு கொஞ்சம் கொஞ்சமாக அவர்களுடைய பகுதியைக் குறைக்கலாம், என்று திட்டமிடப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலேவர் : கேள்வி எண் 714 மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகிறது.

வினக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக் குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்].

(2) அறிக்கை அளித்தல்.

மீனளத்துறை பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துறைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கைப் பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை.

Thiru K. VEZHAVENDAN : Sir, I rise to present the report of the Committee on Estimates on the action taken by the Government on the recommendations of the Committee contained in the Report on Fisheries Department.

(3) 1972–73-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

(அ) நிதிக் கோரிக்கை எண் 16—வேளாண்மை.

(ஆ) நிதிக் கோரிக்கை எண் 39—வேளாண்மை மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. மன்னே நாராயணசாமி : பேரவைத் தலேவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 16—வேளாண்மை என்ற தலேப்பின்கீழ் ரூ. 21,03,85,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

Thirumathi T. N. ANANTHANAYAKI : Sir, to discuss about the introduction of Crop Insurance Scheme in Tamil Nadu, I move the following cut motion :—

"That the allotment of Rs. 21,03,85,400 under Demand No. 16, Agriculture, be reduced by Rs. 100."

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலேவர் அவர்களே, விவசாய விளேபொருள்களுக்கு உற்பத்திச் செலவை அனுசரித்து நியாய விலே கிடைக்க ஏற்பாடு செய்வதில் அவசியம் பற்றி விவாதிக்க—